மானியமாகக் கொடுக்கின்ற நிலைமை இருக்கிறது. அதன் காரணமாகத்தான் வருகின்ற பணத்தை விடக் கூடாது; அதன் மூலமாக இதுபோன்ற ஓய்வு விடுதிகளைக் கட்ட வேண்டுமென்ற எண்ணத்தோடு நாம் உதவியைக் கேட்கின்றோம். ஆனால் உள்ளாட்சித் துறையைப் பொறுத்த அளவில் ஏற்கனவே உங்களுக்கு நன்றாகத் தெரியும், பல பஞ்சாயத்து யூனியன்கள் பணம் இல்லாமல் உதவி கேட்கின்ற நிலைமையிலே இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, இவைகளை உள்ளாட்சித் துறையின் மூலமாகச் செய்ய முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலையில் ஏற்படும் லாரி விபத்துக்களில் பெரும்பான்மையானவை இரவு 12 மணிக்குமேலே விடியற்காலம் 3 மணிக்குள்தான் ஏற்படுகின்றன. ஆகவே, இரவு 12 மணிக்கு மேலே 3 மணிக்குள், முழுவதுமாக லாரி, பஸ் போக்குவரத்தைத் தடை செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, எல்லோருக்குமே இரவு 12 மணியிலிருந்து 3 மணி வரையிலும் தூக்கம் வரும் என்று சொல்லிவிட முடியாது. ஒருசிலருக்கு 12 மணிக்கு மேல்தான் தூக்கத்திலிருந்து விழிப்பே ஏற்படுகிறது. ஆகவே, அவைகளை எல்லாம் பார்த்தால் கண்டிப்பாக எந்த நேரத்தில் தூங்குவது, எந்த நேரத்தில் விழிப்பது என்கின்ற நிலைமையே இல்லாமல்தான் இருக்கிறது. ஆகவேதான் அவைகளையெல்லாம் தவிர்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் இந்தத் திட்டத்தையே நாம் அமுலாக்கி இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்விகளை எல்லாம் மக்கள் நல்வாழ்வுத் துறையில் கேட்கலாம் போலிருக்கிறது.

### மேல மணக்குடி—கீழ மணக்குடி ஊர்களை இணைக்க பாலம் கட்டும் திட்டம்.

*915 வினா—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் தொகுதியைச் சார்ந்த மேலமணக்குடி—கீழமணக்குடி ஆகிய ஊர்களை இணைக்க கடல் காயலின் மேலே பாலம் கட்ட மதிப்பீடு ஏதாவது உள்ளதா?

(ஆ) எப்பொழுது இந்த வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. மி. வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் வசிக்கும் 1½ இலட்சம் மீனவர்கள் பலன் அடைய கடற்கரை சாலை அமைக்க அரசு முயற்சி எடுத்து, அந்தப் பாலம் கட்டினால் மீனவர் மற்றும் சுமார் 120 கிராமங்கள் பலன் அடையும். சுமார் 40 ஆயிரம் கிராம மக்கள் பலன் அடைவார்கள். இன்டர்னேஷல் டூரிஸ்ட் சென்ட்டராகிய கன்னியா குமரியையும், டூரிஸ்ட் சென்ட்டராகிய கோவளத்தையும் இணைக்க கடற்கரை சாலை அமைக்க வேண்டுமென்று அரசு திட்டம் தீட்டியுள்ளதாக நான் எண்ணுகிறேன். ஆதலால் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால் கூட, இந்தப் பாலம் உடனடியாகக் கட்டப்பட வேண்டும். அதற்கு எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டுள்ளது. அது அடுத்த மதிப்பீட்டிலாவது உடனடியாக எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்தப் பணிக்காக, தோராயமாக, ரூபாய் 36 இலட்சம் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது நிதிநிலை சரியில்லாத காரணத்தால், அரசின் ஒப்புதல் பெற்ற எந்தத் திட்டத்திலும் இது அங்கீகரிக்கப்படவில்லையென்ற காரணத்தாலும் அடுத்த ஆண்டு அதுபற்றி பரிசீலிக்கலாம்.

திரு. மி. வின்செண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மேல மணக்குடிக்கும் கீழ மணக்குடிக்கும் உள்ள தூரம் அரை பர்லாங்கூட இல்லை. ஆனால், மேல மணக்குடியிலிருந்து கிராம மக்கள் கீழ மணக்குடிக்கு வர 14 மைல் தூரம் சுற்றவேண்டியிருக்கிறது. ஆதலால், இந்தப் பாலத்தைக் கட்ட அரசு வேகமாக பணியைக் கட்டாயமாக மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கீழ மணக்குடிக்கும் மேல் மணக்குடிக்கும் இடையே சாலை எதுவும் கிடையாது. அங்கே பழையாறு என்ற ஆறு குறுக்கிடுகிற காரணத்தால், அதற்காக 200 மீட்டர் அகலத்துடன் பாலம் கட்ட வேண்டிய சூழ்நிலையெல்லாம் இருக்கிறது என்று எனக்குக் குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அவைகளையெல்லாம் கவனத்திலே கொண்டு பரிசீலிக்கப்படும்.